අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/3/53/02/15/සිසුන් ඇතුළත් කර ගැනීම

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.06.

உயர் தர தொழிற் பாடத்துறையுடன் கூடிய சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

***<u>உயர் தர தொழிற் பாடத்துறைக்கு மாணவர்களை அனுமதித்தல் (2024/2025 வருடம்)</u>***

*2024/2-25 கல்வி வருடத்தில் உயர் தர தொழிற் பாடத்துறையின் (13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்) கீழ் தரம் 12 இற்கு மாணவர்களை அனுமதித்தல் மற்றும் பாடத்துறைக்குரிய கல்விச் செயற்பாடுகளை கீழே தரப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்*

1. ***மாணவர்களை அனுமதித்தல்.***

*1.1* ***2023 வருடத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இந்தப் பாடத்துறையில் கற்பதற்காக தரம் 12 வகுப்பிற்கு அனுமதிக்கப்படல் வேண்டும். க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் மாணவர்களை அனுமதிப்பதற்கான நியதியொன்றல்ல என்பதை வலியுறுத்தி தெரிவித்துக் கொள்கின்றேப்.***

*1.2 பாடசாலைக்கு அனுமதிப்பதற்குரிய வயதெல்லையை தாண்டாதவர்களாக இருப்பின் அதற்கு முந்தைய வருடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களையும் அனுமதிக்க முடியும் என்பதுடன் தரம் 11 அல்லது அதற்கு முந்தைய தரங்களில் இருக்கும் போது பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்கள் இப் பாடத் துறைக்கு அனுமதி கோரும் சந்தர்ப்பங்களில் குறித்த மாணவர்களது நலன் கருதி அவர்கள் தரம் 12 இற்குரிய வயதினை அடைந்திருப்பின், அதிபர்கள் அம் மாணவர்களை தொழிற் பாடத்துறைக்கு அனுமதிக்க முடியும்*

*1.3* ***இதன் போது உரிய பாடசாலையிலிருந்து மாத்திரமல்லாது ஏனைய அரச, தனியார் அல்லது சர்வதேச பாடசாலை ஒன்றிலிருந்து அல்லது தனிப்பட்ட பரீட்சார்த்தியாக சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய எந்தவொரு மாணவரையும் பாடசாலைக்கு அனுமதிக்க முடியும்.***

*1.4 க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையின் விலகியமைக்குரிய மாணவர் செயலாற்றுகைப் பத்திரம் காணப்படாத சந்தர்ப்பங்களில் அவ்வாறாக அனுமதிக்கப்படும் மாணவர்களது பெயர்களை தற்காலிக ஆவணம் ஒன்றில் பதிவு செய்து அவர்களை அனுமதிக்க முடியும். உரிய மாணவர் செயலாற்றுகைப் பத்திரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் வழமையாக மாணவர்களை அனுமதிப்பதைப் போன்று அனுமதிக்க நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.*

*1.5 மாணவர்களை அனுமதிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய மாதிரி விண்ணப்பப் படிவம் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளது. இதன் மென் பிரதியை கல்வி அமைச்சின் இணையத் தளத்தின் (https//moe.gov.lk) விசேட அறிவித்தல்கள் பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*1.6* ***பாடசாலைக்கென அனுமதிக்கப்பட்டுள்ள வகுப்புக்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மாணவர்களை அனுமதிப்பது அத்தியாவசியமாகும்.*** *மாணவர்களை பாடசாலைக்கு அனுமதிப்பதற்காக அண்மித்த பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகள், பாடசாலை சமூகம், மாணவர்கள் மற்றும் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இவ் விடயம் தொடர்பாக அறியப்படுத்துவது பாடசாலை அதிபர் மற்றும் பாடத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியரின் பொறுப்பாகும்.*

1.7 இந்தப் பாடத்துறைக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களும் பாடசாலை மாணவர்களாகவே கருதப்படுகின்றனர் என்பதுடன் மாணவர்களுக்கான சீருடைத் துணி உட்படலாக பாடசாலை மாணவர்களுக்கு உரித்தான அனைத்து வரப்பிரசாதங்களும் இம் மாணவர்களுக்கும் உரித்தாகும். அதே போன்று பாடசாலை விளையாட்டு, இணைப் பாடவிதானம் மற்றும் வெளிப் பாடவிதான செயற்பாடுகள் உட்படலாக ஏனைய பாடசாலை செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்கான உரிமை இம் மாணவர்களுக்கும் உள்ளது.

1.8 பாடசாலையில் தரம் 12 இல் கற்று, தரம் 13 இல் தொழிற் பயிற்சிக்காக நிறுவனங்களுக்கு இணைக்கப்படும் இந்த மாணவர்களிடம் ஒரு வருட காலப் பகுதிக்குரிய வசதிகள் மற்றும் சேவைகள் கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்துவக் கட்டணம் ஆகியனவற்றை அறவிட முடியும். இதன் போது பொருளாதார பிரச்சனைகள் காணப்படும் மாணவர்களை கிராம சேவை உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் இக் கட்டணங்களை அறவிடுவதிலிருந்து விலக்களிக்க நடவடிக்கையெடுத்தல் வேண்டும் **இது தவிர்த்து வேறு எந்தவிதமான மேலதிக நிதி அறவீடுகளையும் மேற்கொள்ளலாகாது என்பதை வலியுறுத்துகின்றேன்.**

1.9 பாடத் துறையின் அடுத்த கட்ட செயற்பாடுகளுக்காக சகல மாணவர்களும் தேசிய அடையாள அட்டை மற்றும் இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கு ஒன்றைக் கட்டாயம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதனால், மாணவர்களை அனுமதித்ததன் பின்னர், அடையாள அட்டை/ வங்கிக் கணக்கு இல்லாத மாணவர்களுக்கு அடையாள அட்டை/ வங்கிக் கணக்கு ஆகியவற்றை தயார்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டும்

## 2. பாடத் துறைக்குரிய கல்விசார் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

2.1 2024/25 வருடத்தில் **தொழிற் பாடத்துறையை நடைமுறைப்படுத்துவதற்காக திட்டம்** கீழே தரப்பட்டுள்ளது.

| தரம் | கற்கைக் காலம் | தவணை | செயற்பாடு |
|---|---|---|---|
| தரம் 12 | 2024 ஜூன் முதல் டிசம்பர் வரை | முதலாம் தவணை | • பொதுப் பாடத்துறைக்குரிய கற்பித்தல்<br>• மாணவர்களுக்கான ஆளுமை விருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் |
| | | இரண்டாம் தவணை (தொழிற் பயிற்சி ஆரம்பிக்கும் வரையில்) * | • மாணவர்களுக்கு தொழிற் பாடங்கள் தொடர்பான அறிமுகத்தை வழங்குதல் |
| தரம் 13 | 2025 ஜனவரி முதல் | தொழிற் பயிற்சிக்காக இணைப்புச் செய்தல் | |

*க.பொ.த (சா/த) பரீட்சை நடைபெறும் காலம் முறைமைப்படுத்தப்படும் வரையில் தொழிற் பாடத்துறைக்குரிய பாடசாலைக் கற்கைக் காலமானது தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பாடநெறிகள் ஆரம்பிக்கும் கால எல்லைகளுக்கு அமைவாக திருத்தங்கள் செய்யப்படவேண்டி இருக்கும்.

2.2 தரம் 12 இற்குரிய பொதுப் பாடங்கள் மற்றும் தொழிற் பாடங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட **மாதிரி கால அட்டவணை இணைப்பு 2 இல்** தரப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி மாணவர்களது கல்விசார் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்ளக்கூடியவாறு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய கால அட்டவணை ஒன்றை தயாரித்துக்கொள்ள முடியும். உரிய ஆசிரியர்களுக்கு கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக **தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள் மற்றும் தொழிற் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களைக் கண்காணிப்பதற்காக காலம் ஒதுக்கப்பட்டிருத்தல் கட்டாயமாகும்**.

2.3 பாடத்துறைக்காக வழங்கப்பட்டுள்ள பௌதீக வளங்களை உச்ச பட்ச வினைத்திறனும் பயன்படுத்துவது அதிபரின் பொறுப்பாகும் என்பதுடன் தொழிற் பாடத்துறை மாணவர்களுக்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவ் வளங்களைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிப்பது கட்டாயமாகும். **பாடத்துறையினை நடைமுறைப்படுத்தாமல் பௌதீக மற்றும் மனித வளங்களை வைத்திருப்பது கணக்காய்வுக்கு உட்படுத்தப்படக்கூடிய ஒரு விடயம் என்பதை வலியுறுத்தி தெரிவித்துக் கொள்கின்றேன்**

3. 2024/2025 வருடத்திற்காக தரம் 12 இல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களது சாராம்சப்படுத்தப்பட்ட தகவல்களை இணைப்பு 3 மாதிரிக்கு அமைவாக பூரணப்படுத்தி 2024.07.31ம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முகவரி- கல்விப் பணிப்பாளர் (அனைவருக்கும் கல்வி), கல்வி அமைச்சு, இசுருபாய,
பத்தரமுல்ல.

மின்னஞ்சல் முகவரி - vs.studentenrolled.moe@gmail.com

ஜே.எம் திலகா ஜயசுந்தர
செயலாளர்

<u>பிரதிகள்</u>-
1. அனைத்து மாகாண ஒருங்கிணைப்பாளர்கள் (உ/த தொழிற் பாடத்துறை)– உரிய நடவடிக்கைக்காக
2. அனைத்து வலய ஒருங்கிணைப்பாளர்கள் (உ/த தொழிற் பாடத்துறை) – உரிய நடவடிக்கைக்காக